## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் செவித்திறன் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன்பேசிகள் வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை

அரசாணை (ப) எண்.34

நாள்: 06.12.2021
பிலவ, கார்த்திகை 20,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (டி) எண்.30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 25.09.2020.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண். 1649/உ.உ-பிரிவு/2021, நாள் 04.05.2021.

******

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 5000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் 5000 செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு திறன்பேசியின் விலை ரூ.10,000/- என்ற மதிப்பில், மாற்றுத்திறனாளிகள் பிறரை எளிதில் தொடர்பு கொள்வதற்கான தக்க செயலிகளுடன் கூடிய 10,000 திறன் பேசிகள் வழங்குவதற்கு ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், 2021-2022-ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் 2021-2022-ஆம் நிதியாண்டிலும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் செவித் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு திறன்பேசிகள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட ரூ.10.00 கோடிக்குள் கொள்முதல் செய்வதற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அனுமதி வழங்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, 2021-2022 ஆம் நிதியாண்டில் சுமார் 5000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் 5,000 செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன் பேசி வழங்கும் திட்டத்தினை தொடர்ந்திட நிர்வாக அனுமதியும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக கீழ்க்காணும் நிபந்தனையின் அடிப்படையில் ரூ.10.00 கோடியினை (ரூபாய் பத்து கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது:-

i) அரசாணை (ப) எண்.30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 25.09.2020-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி ஒரு திறன் பேசி ரூ.10,000/- என்ற விலைக்கு மிகாமல் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

ii) திறன்பேசிகளின் விலை மற்றும் எண்ணிக்கையில் மாறுபடும் நேர்வுகளில் அரசின் முன் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும்.

iii) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி வெளிப்படை தன்மைக்கு ஏற்ப கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன்–101 மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – DM – கேட்கும் திறன் மற்றும் பார்வைதிறன் குறைபாடுள்ளவர்களுக்கு திறன்பேசி வழங்குதல் – 309 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
[IFHRMS த.தொ.கு. 2235 – 02 -101 – DM – 30903]"

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.53875/நிதி(சந)/2021, நாள் 01.12.2021-இன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9/35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்,
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதி (சந)த் துறை, சென்னை–9.
செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
6.12.21